TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA
a nation that upholds integrity

No. 5/1, Elibank Road, Colombo 05, Sri Lanka
Tele : (94) 11 4369781, 11 4369782, 11 4369783
Fax : (94) 11 2 501 707
Email : tisl@tisrilanka.org
Web: www.tisrilanka.org

கௌரவ. மகிந்த ராஜபக்ஷ

பிரதம மந்திரி

பிரதமர் அலுவலகம்

58, சேர். ஏனர்ஸ் டி சில்வா மாவத்தை

கொழும்பு - 07

22 மே 2020

கௌரவ பிரதம மந்திரி அவர்களுக்கு,

**கோவிட் - 19 தொற்றின் போது சர்வதேச தலைமைத்துவத்தினை ஏற்படுத்திக்கொள்வதற்கான சந்தர்ப்பம்**

கோவிட் - 19 தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக இலங்கைக்கு கிடைத்த நிதி, பொருள் சார் நன்கொடைகள் மற்றும் அன்பளிப்புக்கள் தொடர்பான தகவல்களை சுயமான முன்வந்து வெளிப்படுத்துவதனூடாக கோவிட் 19 தொற்றுநோயைக் கையாள்வதிலான பிராந்திய மற்றும் சர்வதேச ரீதியிலான தலைமைத்துவத்தினை இலங்கை ஏற்படுத்திக்கொள்வதற்கான சந்தர்ப்பத்தினை சுட்டிக்காட்டும் வகையில் இக்கடிதம் அமைகின்றது.

கீழ்வரும் மூன்று படிமுறைகளை நிதி அமைச்சு அமுல்படுத்த வேண்டும் என TISL பரிந்துரைக்கின்றது:

1. இற்றைப்படுத்தப்பட்ட செலவீனங்கள் விபரங்களுடனான கிடைக்கப்பெற்ற நன்கொடைகள்.'.அன்பளிப்புக்கள் தொடர்பிலான அனைத்து விபரங்களையும் கொண்டமைந்த இயங்கலை (Online) தளத்தை நிறுவுதல்.
2. கொள்முதல் செயன்முறையின் போதும் நடைமுறைப்படுத்தலின் போதும் நேரந்தாழ்த்தாத இற்றைப்படுத்தப்பட்ட அனைத்து அரசாங்க கேள்விப்பத்திர அறிவித்தல்களையும், தொடர்புபட்ட ஆவணங்களையும், தொழிநுட்ப மதிப்பீடுகளையும், தீர்மானங்களையும், இன்னும் பிறவற்றையும், வெளியிடுவதற்காக இலத்திரனியல் கொள்முதல் தளத்தைப் பேணல்.
3. தகவல் அறியும் உரிமைச் சட்டத்திற்கு அமைவாகவும் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவினால் அறிவிக்கப்பட்ட விதிமுறைகளுக்கு இணங்கவும் சகல பொது அதிகாரசபைகளிலும் கடுமையான பதிவு முகாமைத்துவ நடைமுறைகளுக்கான தேவையை மீள்-வலுப்படுத்தும் சுற்றறிக்கை ஒன்றை வெளியிடுதல்.

கோவிட் - 19 இனை ஒழிக்கின்ற இலங்கையின் முயற்சிக்கு உதவும் நோக்கில் இது வரை 128 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வழங்க உலக வங்கியும், 22 மில்லியன் யூரோ வழங்க ஐரோப்பிய ஒன்றியமும், 6 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வழங்க அமெரிக்காவும் பற்றுறுதி அளித்துள்ளதாகவும், 500 மில்லியன் சலுகைக் கடனை சீன அரசாங்கம் வழங்கியுள்ளதாகவும் ட்ரான்ஸ்பேரன்சி இன்ட்ர்நெஷனல் புரிந்துகொண்டுள்ளது. SAARC கொரோனாவைரஸ் அவசர நிதிக்கு இலங்கை 500 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்க பற்றுதியளித்துள்ளமை குறித்தும் TISL அறிந்திருக்கின்றது. கோவிட் - 19 சுகாதார சேவைகள் மற்றும் சமூக பாதுகாப்பு நிதி ஒரு பில்லியனுக்கும் அதிகமான பணத்தினை நன்கொடைகள் மூலமாகப் பெற்றுக்கொண்டுள்ளதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபகஷ அறிவித்துள்ளார்.

முழுமையான வெளிப்படைத்தன்மையுடன் சமூக பாதுகாப்பு நிதி பயன்படுத்தப்படும், கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கு விபரங்கள் பொதுமக்களுடன் பகிர்ந்துகொள்ளப்படும் என்ற ஜனாதிபதியின் உறுதிமொழிகளை நாம் வரவேற்கின்ற அதேவேளை வெளிநாடுகளிலிருந்து கிடைக்கப்பெறுகின்ற நிதி/நன்கொடைகளைப் பயன்படுத்துவதில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்காக தகவல்களை வெளியிடுகை தொடர்பிலான சர்வதேச சிறந்த நடைமுறைகளைப் பின்பற்றுமாறும் நிதி அமைச்சர் என்ற வகையில் உங்களை வேண்டுகின்றோம்.

வெற்றிகரமான கோவிட் - 19 நிதிக் கொள்கை கையாளுகையில் பிரதானமானது, நிதி வெளிப்படைத்தன்மையை உறுதிசெய்தல், பொதுப் பொறுப்புக்கூறலை பாதுகாத்தல், நிறுவன சட்ட வலிதுடைத்தன்மையினைப் பேணல் என்பவற்றின் முக்கியத்துவத்தினை சர்வதேச நாணய நிதியம் (IMF), 'கோவிட் - 19 இனைக் கையாள்வதற்கான நிதிக் கொள்கைகள்" எனும் தொடரின் ஒரு பகுதியாக நிதி விவகாரங்கள் குறித்த கட்டுரையில் கோடிட்டுக்காட்டுகிறது.

கோவிட் - 19 தொற்றினைக் கையாளுவதற்கு முன்பு பயன்படுத்தியிராத அணுகுமுறைகளை முன்னெடுக்கின்ற அரசாங்கங்கள் நேர்த்தியான ஆவணப்படுத்தல் முன்னெப்போதையும் விட அவசியமானது எனக் கூறுகின்ற யுனெஸ்கோ (UNESCO) மற்றும் தகவல் ஆணையாளர்களின் சர்வதேச மாநாடு கையெழுத்திட்டப்பட்ட கூட்டு அறிக்கையில் "தீர்மானங்கள் மற்றும் பரிவர்த்தனைகளை ஆவணப்படுத்தலின் தேவை" அடிப்படை நடவடிக்கைகளில் ஒன்று என குறித்துரைக்கப்பட்டுள்ளது. தொற்றின் போதும், தொற்றின் பின்னரும் அரசாங்கங்கள் பொறுப்புக்கூறலுக்கு ஏற்றவிதத்தில் இவ்வாறான அவசர காலங்களிலும் அதற்குப் பின்னரான காலங்களிலும் அரசாங்கங்களின் தொடர்ச்சியான பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கு, என்ன அடிப்படையில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன, சம்பந்தப்பட்ட சிரேஷ்ட தீர்மானிப்பாளர்கள் போன்ற விபரங்கள் முழுமையாக ஆவணப்படுத்த வேண்டியது அவசியமாகுமெனவும் அந்தக் கூட்டறிக்கை மேலும் குறிப்பிடுகின்றது.

மேலும், தகவலறியும் உரிமை தொடர்பான உலகளாவிய கண்காணிப்புக் குழுவான Article–19 ஆல் அண்மையில் வெளியிடப்பட்ட 'கோவிட்-19 தொற்றுக்காலங்களில் பொதுமக்களின் அறிந்துகொள்வதற்கான உரிமையை உறுதிப்படுத்தல்' சுருக்கக் குறிப்பில் உலகெங்கிலுமுள்ள அரசாங்கங்களினால் பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்யவும், வியாபார நிறுவனங்களுக்கும் சமூகங்களுக்கு உதவியளிக்கவும் பில்லியன் கணக்கான டொலர்கள் பற்றுறுதியளிக்கப்பட்டு வருகின்றது என்பதனை ஏற்றுக்கொள்கிறது. நியாயப்படுத்தல், ஒதுக்கீடு, இவ் அசாதாரண செலவீனங்களின் பெறுபேறுகள் தொடர்பான வெளிப்படைத்தன்மை கண்காணிப்பினை வழங்கவும், நிதிகள் நியாயமானதும் விவேகமானதுமான முறையிலும் பயன்படுத்தப்படுகின்றது என்பதனை உறுதிப்படுத்தவும், ஊழலினைத் தவிர்க்கவும் அத்தியாவசியமானது என அவர்கள் வலியுறுத்துகின்றனர்.

கோவிட் - 19 தொற்றின் காரணமாக நாட்டின் நிர்வாகத்தில் ஏற்பட்டுள்ள சிரமங்கள் மற்றும் சவால்களையும் உண்ணாட்டில் கோவிட் - 19 தொற்றை கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் மேற்கொண்டுவரும் முயற்சிகளையும் பாராட்டும் அதேவேளை, உயர் ஆபத்து என்கின்ற விடயம் பொறுப்புக்கூறலானது முன்னெப்போதையும் விட முக்கியமானது என்பதனைக் குறித்து நிற்கின்றதென TISL நிறுவனம் நம்புகின்றது.

இயன்றளவு தகவல்களை இயலுமானவரை பொதுமக்களுடன் பரிமாறிக்கொள்வதானது, ஒவ்வொரு குடிமகனும் தகவல்களின் அடிப்படையிலான முடிவுகளை எடுப்பதனை ஏதுவாக்குவதோடு, அரசாங்கத்தின் முயற்சிகள் தொடர்பாக மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தவும் உதவும். அத்தோடு, பொதுமக்கள் கண்காணிப்பின் ஊடான புற-பொறுப்புக்கூறலினை சேர்த்துக்கொள்ளல் ஊழல் அபாயங்களைக் குறைக்கவும் உதவும். செலவீனங்கள் காலத்தின் தேவையினால் நியாயப்படுத்துவதை இவ் விபரங்களின் கிடைக்கும் தன்மை உறுதிப்படுத்துகின்றது.

குறைந்த வருமானம் ஈட்டுபவர்களுக்கான ரூபா 5000 உதவித்தொகைத் திட்டம் போன்ற உதவிகளின் நிர்வாகம் மற்றும் ஒதுக்கீடு உட்பட, கோவிட் 19 தொற்றுநோய் கையாளுகையுடன் தொடர்புபட்ட வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் போன்ற விடயங்கள் தொடர்பில் கடந்த இரண்டு மாதங்களில் பொதுமக்கள் TISL இடம் கரிசனை தெரிவித்துள்ளனர். கையாளுகை தொடர்பிலான சகல விடயங்கள் தொடர்பிலுமான பரந்துபட்ட கரிசனை இந்நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்டவர்கள் பொதுமக்கள் என்பதனை அங்கீகரிப்பதுடன் இந்நெருக்கடியினைக் கையாளுகின்ற முறை ஊழலும் முறையற்ற மேலாண்மையும் பரவுவதற்கான சந்தர்ப்பத்தினை அஜாக்கிரதையாக முறையில் வழங்கிவிடவும் கூடாது.

நிதி அமைச்சர் என்ற வகையில் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று பரிந்துரைகளையும் அமுல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு TISL வேண்டுகோள் விடுக்கின்றது. கோவிட் 19 தொற்றுநோயைக் கையாள்வதில் தகவல் பரிமாற்றம் மற்றும் பொதுமக்கள் பங்கெடுப்பு தொடர்பில் சர்வதேச தலைமைத்துவத்தினை இலங்கை வழங்குவதற்கு இந்நேரத்தில் விரைந்து செயற்படுதல் வழிவகுக்கும். பொதுமக்கள் நலன் தொடர்பிலான இம் முயற்சிக்கு உறுதுணையாக இருப்பதில் மகிழ்ச்சி கொள்கிறோம்.

நன்ற,

உண்மையுள்ள,

---

அசோக்க ஒபேசேக்கர

நிறைவேற்றுப் பணிப்பாளர்

ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் ஶ்ரீலங்கா